போர்வாள்

ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B.A. (Hons)

திராவிடர் வார வெளியீடு

தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

வாள் 2 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 வைகாசி 29 — 11—6—49 சனிக்கிழமை | வீச்சு 41

வாழத் தெரிந்தவர்கள் உலகத்தோடு ஒட்ட ஒழுகக் கற்றுக் கொண்டுவிடுகிறார்கள். வாழத் தெரியாதவர்கள் உலகத்தையே தங்கள் பக்கம் திருப்பிக்கொள்ளப் பார்க்கிறார்கள். எனவே உலக முன்னேற்றம் முழுவதும் இந்த வாழத் தெரியாதவர்களைத் தான் பொறுத்திருக்கிறது.

—பெர்னட்ஷா.

நியமனம்! நியமனம்! எதற்கெடுத்தாலும் நியமனம்!

ஒரு காலத்தில் நியமனமுறை என்றாலே, அது எதேச்சாதிகாரத் திட்டம் என்று சீறி விழுந்த காங்கிரஸ்காரர்கள், இப்போது, நியமனம், நியமனம், எதற்கெடுத்தாலும் நியமனம் என்ற பாசுரச் சிந்து பாடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு வந்துவிட்டார்கள். காஷ்மீரிலிருந்து இந்திய அரசியல் அமைப்பு மன்றத்திற்குப் பிரதிநிதிகளை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பிறர் கூறினால் "கூடாது கூடாது—மகாராஜாவே தன் விருப்பப்படி நியமித்துவிடட்டும்" என்கிறார்கள். எல்லா மாகாணங்களுக்கும் கவர்னர்களை அந்தந்த மாகாணத்து மக்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கட்டும் என்றால்; சேச்சே! அது தவறு, மத்திய சர்க்கார், தம் மனதுக்குப் பிடித்த குணாளர்களை, தாமே நியமித்துவிடட்டும் என்கிறார்கள். இப்படி எதற்கெடுத்தாலும் நியமனம் என்ற கொள்கையை சர்க்கார் கடைப் பிடித்தால் ஜனநாயகம், தேர்தல், நல்லாட்சி முறை முதலியன நாட்டில் உலவ முடியுமா? முடியாது முடியாது என்று இதே பாரதபுத்திரர்கள் முன்னரெல்லாம் இடிமுழக்கம் புரிந்ததை இவர்கள் மறந்துவிட்டார்களா? இவர்கள் மறந்துவிட்டாலும் நாடு மறக்கமுடியுமா?

பார்ப்பனீயம் தலைக்கும்வரை ஜாதிபேதம் ஒழியாது

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னால், மாணவரல்லாத மற்றவர்கட்கு எங்கே தெரியப்போகிறது! நம்மைப்பற்றி இவ்வளவு அறியாமை மேகம் கவிந்துகொண்டிருக்கிறது வட இந்திய வான் வெளியில் இத்தகைய வடநாடுதான் தென்னாட்டுடன் என்றென்றும் இணைந்து நின்று, ஒரே ஆட்சி, ஒரே நாடு என்ற தத்துவத்தின்கீழ் இருக்கமுடியுமாம்! எழுதுகிறார்களே இங்குள்ள பாரதபுத்திரர்கள்! எவ்வளவு அறிவுத்தெளிவு!

சென்னையையும் தஞ்சாவூரையும்விட லண்டனும் பாரிசும் நியூயார்க்குமே தங்கள் ஊருக்கு அருகில் உள்ளன என்பதாக வட இந்தியர்கள் நினைக்கிறார்கள் என்று எழுத்தாளர் அப்பாஸ் எழில் மிகு முறையில் தீட்டியுள்ளாரே, இந்த வாசகத்திற்குப் பொருள் தென்னிந்தியர்களாகிய நம்மைவிட ஆங்கிலேயர்களையும் பிரஞ்சுக்காரர்களையும் அமெரிக்கர்களையுமே வட இந்தியர்கள் தங்கள் உறவினர்களாகக் கருதுகிறார்கள் என்பதுதானே? இங்கே இவ்வளவு அருகில் இருக்கும் சென்னையையும் தஞ்சாவூரையும்விட எங்கோ 6000 மைல்களுக்கு அப்பால் உள்ள இலண்டனையும் நியூயார்க்கையுமே தங்கள் ஊர்களுக்குப் பக்கத்து ஊர்கள் என்பதாக அவர்கள் கருதுகிறார்கள் என்றால், அது, அவர்கள் நம்மை எவ்வளவு தூரம் அயலவராகக் கருதி வெறுக்கிறார்கள் என்பதற்குத் தானே எடுத்துக் காட்டு. ஆங்கிலேயரிடம் தமக்குள்ள நெருக்கம் அல்லது பாசம்கூட தென்னிந்தியரிடம் இருப்பதாகக் கருதாத அவர்களிடம் நாம் இணைந்து வாழ்வது என்றால் அது நடக்கிற காரியமா, நடக்கிற காரியமே என்று ஒப்புக்கொண்டாலும் அது நம் தன் மானத்திற்கு ஏற்றதா, ஏனோ இங்குள்ள மூவர்ணக்கொடியினர் இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்க மறுக்கிறார்கள்! எண்ணிப் பார்க்கும் இயல்பே, சிந்திக்கும் சக்தியே, எதையும் உள்ளம் எனும் தராசில் வைத்து எடைபோட்டுப்பார்க்கும் பழக்கமே காங்கிரஸ் திராவிடர்களுக்கு இல்லாமல் போய்விட்டதா, ஏன் அவர்கள் வடநாட்டவர் நம்மை அயல் நாட்டவராக எண்ணி வெறுக்கும் இந்த நிலையிலும் அவர்களின் அடி தொழுது வாழவேண்டுமென விழைகிறார்கள்?

* * *

தென்னாட்டு மக்களின் வாழ்க்கையையும் கலை—நாகரிகம்—இலக்கியம்—மொழி ஆகியவற்றைப்பற்றியும் வட இந்தியர்களுக்குள்ள அளவுகடந்த அறியாமையை அழகுறப் படம் பிடித்துக் காட்டியதோடு நிற்கவில்லை தோழர் அப்பாஸ். வட இந்தியர்களுக்கு நம்மீது மிக்க அருவருப்பும் இருக்கிறது என்று எடுத்துக் காட்டி இருக்கிறார். நம்முடைய வாழ்க்கையையும் பண்பாட்டையும் மொழி கலை நாகரிகத்தையும் பற்றிய அறியாமை, வட இந்தியர்களிடம், பிரம்மாண்டமான அளவில் இருப்பதே நாம் இரு சாராரும் ஓர் இனத்தவரே ஒரு நாட்டவரே என்ற கொள்கைக்கு வேட்டு வைக்கும் தன்மையது! இந் நிலைமையில் அந்த அறியாமையோடு நம்மைப் பற்றி அருவருப்பும் இருக்குமானால், அவர்களுக்கும் நமக்கும் இப்போது பலாத்காரத்தின் மூலமும் பிரிட்டிஷாரின் பொறுப்பற்ற அதிகார மாற்றத்தின் காரணமாகவும் ஏற்பட்டுள்ள போலி உறவு எத்தனை நாட்களுக்கு நீடிக்கமுடியும்?

"தென் இந்தியர்களைப்பற்றி வட இந்தியர்களுச்கு அறியாமை மட்டுமல்ல—அருவருப்பும் இருக்கிறது. இந்த அருவருப்பு அவர்களிடையே ஏற்பட்டிருப்பதற்கு முழுக் காரணமாக இல்லாவிட்டாலும், ஓரளவுக்காவது காரணமாக இருப்பது அவர்கள் பள்ளிக்கூடங்களில் படிக்கிறார்களே, அந்த வரலாற்றுப் புத்தகங்கள்தான்."

"பிரிட்டிஷ்காரர்களாலும் பிராமணர்களாலும் எழுதப்பட்டுள்ள இந்த வரலாற்றுப் புத்தகங்கள்தான், ஒசந்த ஜாதியினரும் நாகரிகம் அடைந்தவர்களுமான ஆரியர்கள், இந்தியாவின் ஆதிகுடிகளும் காட்டுமிராண்டிகளும் ஆகிய பழந் திராவிடரை தென்னிந்தியாவுக்குத் துரத்தி விட்டார்கள் என்று கற்பிக்கின்றன."

"[ஆரியர்கள் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரே திராவிடர்கள் ஆரிய நாகரிகத்தைவிட உயர்ந்த நாகரிகம் படைத்தவர்களாய் விளங்கினார்கள் என்பதற்குச் சரியானதோர் சான்றாக விளங்கும்.] மகஞ்சதரோ நகரம் கண்டு பிடிக்கப்பட்ட பிறகும்கூட, வட இந்தியர்கள், ஆரியர்கள் வருவதற்கு முன்னால் இந்தியாவில் காட்டுமிராண்டித்தனமே நிறைந்திருந்தது என்றும், ஆரியர்கள் வந்துதான் இந்த நாட்டின் ஆதி குடிகளாகிய திராவிடர்களுக்கு நாகரிகத்தைக் கற்றுக் கொடுத்தார்கள் என்றும் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள்."

"[தங்களை அந்த ஒசந்த ஜாதி ஆரியர்களின் வழிவந்தவர்கள் என்றும், தென்னாட்டில் இருப்பவர்கள் அந்த ஆரியர்களால் துரத்தி அடிக்கப்பட்ட காட்டுமிராண்டித் திராவிடர்களின் வழிவந்தவர்கள் என்றும் கருதுவதால்தான்] ஏராளமான வட இந்தியர்கள், நாகரிகமும் நல்ல பண்பாடும் இமயமலையிலிருந்து விந்தியமலை வரையில் தான் உள்ளன என்றும், விந்தியத்திற்குத் தெற்கே உள்ள தென்னாடு கலாசாரத்தின் மேன்மையை அறியாத இருண்ட பிரதேசம் என்றும் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள்."

"இப்படியெல்லாம் வட இந்தியர்கள் தென்னிந்தியரைக் குறித்து இழிவாக எண்ணிவருவதற்கு நான்கு காரணங்கள் உண்டு. ஒன்று: அறியாமை! இரண்டு: தென்னிந்தியர்கள் என்றாலே அவர்கட்கு ஏற்படும் ஒருவித அருவருப்பு! மூன்று: தங்களை ஆரியர்கள் என்று எண்ணிக்கொள்வதால் ஏற்படும் அகம்பாவம்! (Aryan Arrogance) நான்கு: இந்தியாவின் தலைநகரம் பல நூற்றாண்டுகளாக வட இந்தியாவிலேயே இருந்துவரும் விசித்திர நிலைமை!"

தோழர். அப்பாஸ் தன் கட்டுரையின் கடைசிப் பகுதியில் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் இவை. ஒரு வட இந்தியரின் பேனா முனையிலிருந்து உதிர்ந்துள்ள இந்த வாசகங்களைத் தென்னாட்டுக் காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல, இந்தியா ஒரு நாடுதான் என்று கூறி, ஒரே சர்க்காரின்கீழ்தான் இந்தியா முழுதும் இருத்தல்வேண்டும் என்று வாதாடும் தென்னாட்டு சோஷலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் முதலிய எல்லோருமே ஒருமுறைக்கு மும்முறை படித்துப் பார்த்தல் வேண்டும்.

வட இந்தியர்களை Superiority bitten Northerner என்று அழைக்கிறார் அன்பர் அப்பாஸ். அதாவது, தங்களை, தென்னாட்டாரைவிட ஒசந்த ஜாதியினர் என்று கருதிக் கொள்ளும் ஆணவம் பிடித்து அலைபவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். அதுமட்டும் அல்லாமல் அவர்களிடத்தில் Aryan Arrogance ஆரிய

[7-ம் பக்கம் பார்க்க]

★ போர்வாள் ★

திருவள்ளுவர் ஆண்டு 1980 வைகாசி 29
11—6—49 சனிக்கிழமை

ஆரியபுரியினர் ஆர்ப்பாட்டம்!

ஜூன் மாதம் எப்போது வரும் வரும் என்று காத்துக் கொண்டே இருக்கிறார்கள் வேதிய குலத்தவர்கள், ஜூன்மாதம் வந்ததோ இல்லையோ, 'கல்லூரி அட்மிஷனிலும் வகுப்பு வாதமா' என்று தொடங்கும் அவர்களுடைய தியாராஜ கீர்த்தனையை, அக்ஷரப் பிழையின்றி' முகாரி ராகத்தில், தாள சுத்தத்துடன், கனஜோராகவாசிக்க ஆரம்பித்து விடுகிறார்கள்! அறிவுக்கு விகிதாசாரமே அது நாட்டுக்கு அவமானமே என்று ஒரு பார்ப்பன ஏடு பல்லவி பாட, பார்ப்பனர்களுக்கு இடம் மறுப்பது அநீதி அநீதி என்று மற்றொரு ஏடு அனுபல்லவியை வாசிக்க, இந்த காங்கிரஸ் சர்க்கார் என்ன காங்கிரஸ் சர்க்கார் தானா அல்லது மாறு வேடத்தில் வந்திருக்கும் திராவிட கழக சர்க்காரா என்பது இவர்கள் கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்ப்பதில் வகுப்புவாரி முறையை இந்த ஆண்டும் அமுல் செய்யப் போகிறார்களா இல்லையா என்பதைத் தான் பொருத்திருக்கிறது என்று மற்ற ஏடுகளெல்லாம் சரணங்களைப் போட, தகுதியும் திறமையும் வாய்ந்த பிராமண குல மாணவர்களுக்குக் கல்லூரியில் இடம் இல்லை என்று மறுத்து விட்டு தகுதிக் குறைவான பிராமணரல்லாத பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வது நாட்டுக்குத்தானே நஷ்டம் என்று வேறு பல பத்திரிகைகள் பக்க மேளம் வாசிக்க, இப்படியாக ஜாம் ஜாம் என ஆரம்பமாகி விட்டது கனபாடிமார்களின் இந்த வருஷத்து வகுப்பு வாத கச்சேரி!

ஒவ்வோர் ஆண்டும், கல்லூரிகள் திறக்கப்படும் இந்த ஜூன் மாத சமயத்தில், ஆரிய குல பத்திரிகைகள் கல்லூரிகளில் பிராமண குல மாணவர்களுக்கு இடம் தர மறுக்கிறார்கள், பிடித்துத் தள்ளுகிறார்கள், போ வெளியே என்கிறார்கள், வகுப்பு வாதம் தாண்டவமாடுகிறது என்றெல்லாம் ஓங்காரக் குரலில் விஸ்வரூபம் எடுத்தாடுவது "அதுகளுக்கு" ஒரு வழக்கமான விளையாட்டாக ஆகி விட்டது! இந்த விளையாட்டைத் தான் இந்த ஆண்டும் மறந்து விடாமல் ஆடியிருக்கிறார்கள் இந்த வேதிய குல ரட்சகர்கள்!

இப்படி, ஒவ்வோர் ஆண்டும் கல்லூரிகள் திறக்கப்படும் சமயமாகப் பார்த்து, கனபாடிகள் கூட்டம் காட்டுக் கூச்சல் எழுப்பி, கா கூ வெனக் கூவுகிறதே, உண்மையில் நடப்பது என்ன? உண்மையிலேயே பிராமண மாணவர்களுக்கு கல்லூரிகளில் நுழைவு உரிமை மறுக்கப் படுகிறதா? உண்மையாகவே அவர்களுக்குத் தரப்பட வேண்டிய பங்கை, தர முடியாது என்று யாரேனும் எதிர்த்துக் கூறுகிறார்களா? பிராமண மாணவர்களுக்கு நியாயமாக உள்ள உரிமையை யாரேனும் பறித்து விட முயற்சி செய்கிறார்களா? இல்லை இல்லை! அது போலவெல்லாம் ஒன்றும் நடந்து விட வில்லை! 1947-48 ம் ஆண்டு, கல்லூரிகளில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டபோது யார் யாருக்கு எவ்வளவு எவ்வளவு இடங்கள் கிடைத்தன என்ற புள்ளி விவரத்தை அண்மையில் சென்னை சர்க்கார் வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரப்படி, பார்ப்பன குல மாணவர்கள், கலைக்கல்லூரிகளில், நியாயமாகச் சேர்க்கப்பட வேண்டியதை விட **12 மடங்கு அதிகமாகச்** சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். பொறி இயல் கல்லூரி((Engineering College) யில் அது போலவே **7 மடங்கு அதிகமாகச்** சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மருத்துவக் கல்லூரியிலோ, **6 மடங்கு அதிகமாகச்** சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், பயிர்த்தொழில் கல்லூரியில் **8½ மடங்கு அதிகமாகச்** சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கால் நடைகள் கல்லூரியிலோ 17 **மடங்கு அதிகமாகச்** சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு கல்லூரியிலாவது, பார்ப்பன மாணவர்கள் நியாயமாகச் சேர்க்கப்பட வேண்டியதைவிட, ஒரு மாணவனாவது, குறைவாகச் சேர்க்கப்பட்டிருக்கிறான் என்று யாரும் கூற முடியாது. மாறாக எல்லாக் கல்லூரிகளிலும், 6 மடங்கு முதல் 17 மடங்கு வரை கூடுதலாகவேதான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதாவது நியாயமாகச் சேர்க்கப்பட வேண்டிய பார்ப்பன மாணவர்களின் தொகை 100 என்று வைத்துக் கொண்டால், இப்போது சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களின் தொகை 600—சில கல்லூரிகளில்! 7CC—சில கல்லூரிகளில்! 850—சில கல்லூரிகளில்! 1200—சில கல்லூரிகளில்! 1700— சில கல்லூரிகளில்!

**கிடைக்க வேண்டியது 100!
கிடைத்திருப்பது 600 முதல் 1700 வரை!**

இந்தப் புள்ளி விவரத்திற்கு என்ன பொருள்? பார்ப்பன மாணவர்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய 100 இடங்கள் போக மேற் கொண்டு 500 முதல் 1600 இடங்கள் வரை பெற்றிருக்கிறார்களே, அவ்வளவு இடங்களும் நியாயமாகப் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டியவை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், **பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குச் சொந்தமான 500 முதல் 160U வரையுள்ள இடங்களை** பார்ப்பன மாணவர்கள், அநியாயமாக அனுபவித்து வருகிறார்கள் இப்போது! சென்னை சர்க்காரின் தொடை நடுங்கித்தனமும் கோழைத்தனமும்தான் இந்த அநியாயமான நிலை அனாவசியமாக நீடித்துக் கொண்டிருப்பதற்குக் காரணம். இந்த சென்னை காங்கிரஸ் சர்க்கார் மட்டும் கடுகளவாவது தைரியமும், சுண்டைக்காய் அளவாவது பார்ப்பன குலத்தவரின் வறட்டுக் கூச்சலைப் பொருட்படுத்தாத மன உரமும் படைத்தவர்களாக இருப்பார்களானால்,

(6-ம் பக்கம் பார்க்க)

ஏன்? எப்படி? எதற்காக?

★

கேள்வியும் விடையும்

★

[இளஞ்செழியன்]

1. உங்கள் கட்சித் தலைவர் பெரியார், உங்கள் கட்சிக்கு நேர் எதிர்க்கட்சியாகிய காங்கிரசில் உள்ள கனம் ஆச்சாரியாரை ஒப்பற்ற தியாக புருஷர்—சிறந்த மனிதர்—உயர்ந்த அறிஞர் என்றெல்லாம் வெளிப்படையாகப் பாராட்டிக் கூறுகிறாரே, இதைக் கண்டு உங்கட்கு வெட்கமாக இல்லையா?

ஒரு கட்சித் தலைவர் தன்னுடைய நேர் எதிர்க்கட்சித் தலைவரின் சிறந்த பண்புகளையும் செவ்விய ஒழுக்கத்தையும் வெளிப்படையாகப் பாராட்டிப் பேசுகிறார் என்றால் அது, வெட்கப்படுவதற்குரிய நிகழ்ச்சியல்ல; நாட்டு நலனில் அக்கறை உடைய ஒவ்வொருவரும் எண்ணி எண்ணி இறும்பூது எய்துதற்குரிய இனிய சம்பவம். நாட்டில் பலர், பல்வேறு கட்சிகளை அமைப்பது, தத்தமக்கென்று தனியாக உள்ள சிற்சில கொள்கைகளை நிலைநாட்டுவதற்காகத்தான். ஒரு கட்சியின் கொள்கைகள் மற்றொரு கட்சியின் கொள்கைகளுக்கு மாறானவைகளாகவோ முரண்பட்டவையாகவோ இருக்குமானால், அந்தக் கட்சிகளுக்கிடையே "மோதல்" ஏற்படுவது இயற்கை. அப்படி "மோதல்" ஏற்படும்போது, ஒவ்வொரு கட்சியின் தொண்டர்களும் தலைவர்களும், தத்தம் கட்சியின் பலத்தை வளர்ப்பதிலும, எதிர்க் கட்சியின் செல்வாக்கைச் சிதைப்பதிலும் மும்முரமாக ஈடுபடுவர் என்பதும் நாம் எதிர்பார்க்கக் கூடியதே; ஆனால் இந்தக் கட்சி வேலைகளின் காரணமாக, ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் தம்முடைய எதிர்க்கட்சி முகாமிலே தங்கியிருப்பவர்களைத் தம்முடைய ஜென்மப் பகைவர்களாகக் கருதுவதோ, அவர்களைக் கண்ணாலும் காண வெறுத்து ஒதுங்கிச் செல்வதோ, அவர்களுடன் ஒன்றாக பக்கத்தில் நிற்க நேர்ந்துவிட்டாலே பெரும் பாவம் விளையும் என எண்ணுவதோ கூடாது. மாறாக, கட்சியின் காரணமாகவும் கொள்கையின் காரணமாகவும் தமக்குள் ஆயிரம் வேற்றுமைகள் இருந்தாலும், தனிப்பட்ட முறையில், நண்பர்களாகப் பழகுவதும், ஒருவருக்கொருவர் நன்மொழிகளையும் பாராட்டுரைகளையும் பரிமாறிக் கொள்வதும், தத்தம் கட்சி நலனுக்கு இம்மியும் ஊறு நேராத வகையில்ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதும்தான் முறை. நாட்டிலே கட்சி மாச்சரியமும் துவேஷமும் பகைமை உணர்ச்சியும் வளராதிருக்க வேண்டுமானால் அதற்கு, இது போன்ற முறையில் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் நடக்க முயல்வதுதான் நல்ல வழி. இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, பெரியார் அவர்கள், தம் நேர் எதிர்க்கட்சித் தலைவரான ஆச்சாரியார் அவர்களைத் தனிப்பட்ட நட்புமுறையில் சந்தித்ததும், பிறகு, அவருடைய தனிப்பட்ட பண்புநலங்களை வெளிப்படையாக விளக்கிப் பேசியதும், பெரியாரின் பெருந்தன்மைக்கும் சான்றாண்மைக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகள் என்பது எவர்க்கும் நன்கு விளங்கும். இவ்வளவு பெருந்தன்மை படைத்த பேரறிவாளர் தம் தலைமையின் கீழ் பணியாற்றும் பேறு எங்கட்குக் கிடைத்ததே என்பதை எண்ணி நாங்கள் எங்களையே பாராட்டிக் கொள்ளவேண்டுமே தவிர, இதில் வெட்கப்படுவதற்கு என்ன இருக்கிறது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. பெரியார் ஆச்சாரியாரை மனமாரப் பாராட்டிப் பேசியிருப்பதைப் போல, ஆச்சாரியார், பெரியாரின் பண்புகளை எடுத்துச் சொல்லி மகிழ்ச்சியுறவில்லை—அவ்வளவு பெருந்தன்மை ஆச்சாரியாருக்கு ஏற்படவில்லை—எனவே பெருந்தன்மைக் குறைவான ஒரு தலைவரின் கீழ் இருந்து தாங்கள் பணியாற்ற வேண்டி இருக்கிறதே என்பதை எண்ணி ஆச்சாரியாரின் பக்தர்கள் வேண்டுமானால் வெட்கப்படலாமே தவிர நாங்கள் ஏன் வெட்கப்பட வேண்டும்? பெரியார் பாராட்டியிருப்பது ஆச்சாரியாரை! ஆச்சாரியாரின் கொள்கைகளை அல்ல! நினைவிருக்கட்டும்.

2. இப்பொழுது தமிழ் வருஷங்கள் என நடைமுறையில் இருந்து வரும் 60 வருஷங்கள் தமிழா? இல்லையேல் தமிழ் வருஷங்களுக்குப் பெயர் தனியாக உண்டா? இருந்தால் தெரிவிக்கவும்.

இப்பொழுது "தமிழ் வருஷங்கள்" என்ற பெயரால் நடைமுறையில் இருந்துவரும் 60 ஆண்டுகளும் தமிழ் ஆண்டுகள் அல்ல. அவை, ஆரியர்கள், தமிழகத்தில் நுழைந்தபோது தம்முடன்கூடவே அழைத்துக்கொண்டுவந்து இங்கு நுழைத்துவிட்ட ஆண்டுகள்! புராணக் கதையின்படி, நாரதர் பெண் உருவம் கொண்டபோது, விஷ்ணுவுக்கு அந்த நாரதப் பெண்ணின் மீது மோகம் உண்டாகி, அதன் விளைவாக அறுபது குழந்தைகள் பிறந்தனவாம்! அந்த அறுபது குழந்தைகளின் அருமைத் திருநாமங்கள்தானும் தமிழ் வருஷங்கள் என்று சொல்லப்படும் அறுபது ஆண்டுகளின் பெயர்களாகிய பிரபவ, விபவ, சுக்கில, ஆங்கீரச, பிரமோதூத, விசு, பவ, யுவ, சர்வசித்து முதலியவை! இந்த 60 ஆண்டுகளின் பெயர்கள் அத்தனையும், வடமொழிச் சொற்கள் இவற்றில் ஒரு சொல் கூட தமிழ்ச்சொல் அன்று. எனவே இந்த அறுபது ஆண்டு எண்ணிக்கை முறை தமிழருடையதன்று என்பது தெளிவு. இந்த "60 ஆண்டு" என்ற எண்ணிக்கை முறையே தமிழருடையதல்ல என்றால் இவற்றின் வடமொழிப் பெயர்களுக்கு நேரான தமிழ்ச் சொற்கள் எங்ஙனம் இருக்க முடியும்—எனவேதான் இல்லை!

இந்த 60 ஆண்டு எண்ணிக்கை முறை சிறிதும் பயனற்றது. இந்த 60 ஆண்டுகளில் வரும் ஒவ்வொ

ஆண்டும், 60 ஆண்டுகளுக்கு ஒரு முறை திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருக்கும். "பவ" என்றால் 60 ஆண்டுகளுக்கு ஒரு "பவ" வந்துகொண்டே இருக்கும். "யுவ" என்றால் 60 ஆண்டுகளுக்கு ஒரு "யுவ" வந்துகொண்டே இருக்கும். சர்வசித்து என்றால் 60 ஆண்டுகளுக்கு ஒரு சர்வசித்து வந்து கொண்டே இருக்கும். இப்படி இந்த ஆரியர்தம் ஆண்டுமுறை, சக்கரம் போலச் சுழன்று சுழன்று திரும்பத் திரும்ப வந்துகொண்டே இருப்பதால்தான், இது, எதற்கும் பயனற்றதாக இருக்கிறது. சர்வசித்து ஆண்டில் உடுமலைப் பேட்டையில், பெரியார் இராமசாமி பத்தாவது முறையாகக் கைது செய்யப்பட்டார் என்று நாம் இப்போது எழுதிவைக்கிறோம் என்றால், ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் வரும் நம் சந்ததியினர் எந்தக் குறிப்பிட்ட ஆண்டில் உடுமலை சம்பவம் நிகழ்ந்தது என்பதை இந்த ஆண்டுக்குறிப்பை மட்டும் வைத்துக் கொண்டு திட்டமாகத் தெரிந்து கொள்ள முடியாது. ஏனெனில் ஆயிரம் ஆண்டுகளுக்குள்ளாக எத்தனையோ சர்வசித்துகள் வந்துபோய் இருக்கும். எந்த சர்வசித்து ஆண்டில் பெரியார் கைதியானார் என்பதை எப்படி இந்த 60 ஆண்டுக் கணக்கு முறை அவர்களுக்குத் தெரிவிக்கும்? எனவே ஆரியர்கள் வகுத்த இந்த அர்த்தமற்ற, கவைக்குதவாத 60 ஆண்டுக் கணக்கு முறையை உடனே குழிவெட்டிப் புதைக்க வேண்டியது தமிழர் கடமை.

கிறித்தவர்களுக்குக் கிறிஸ்து ஆண்டு இருப்பது போலவும், மகமதியர்கட்கு ஹிஜ்ரி ஆண்டு இருப்பது போலவும், தமிழர்கட்கும் ஒரு தனி ஆண்டு முறை இருக்கவேண்டும் என்று கருதிய **பேராசிரியர் மறைமலை அடிகள்**, தமிழர் அனைவராலும் எவ்வித வேற்றுமையுமின்றி ஒருமனதாகக் கொண்டாடப்படும் திருவள்ளுவர் பிறந்த நாளை வரலாற்று முறைப்படி கணக்கிட்டு, அந்த நாளை அடிப்படையாகக்கொண்டு **திருவள்ளுவர் ஆண்டு** என்ற ஆண்டு முறையை சென்ற பத்தாண்டுகளுக்கு மேலாகவே கையாண்டு வருகிறார். திருவள்ளுவர் பிறந்த நட்சத்திரம் சரியாகத் தெரியாத காரணத்தால், அறிஞர் பலர், தை முதல் நாளையே அதாவது பொங்கல் திருநாளையே, ஒவ்வோர் ஆண்டும் திருவள்ளுவர் ஆண்டுத் தொடக்க நாளாகக் கொண்டு, திருவள்ளுவர் ஆண்டைக் கையாண்டு வருகின்றனர். இந்தக் கணக்குப்படி இந்த ஆண்டுப் பொங்கல் திருநாளிலிருந்து திருவள்ளுவர் ஆண்டு 1980 தொடக்கமாகி இருக்கிறது. இந்த ஆண்டுமுறை சென்ற இரண்டாண்டுகளாக, தமிழரிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்று வருகிறது. சர்வகட்சியினராலும், சகல மதத்தினராலும், எல்லாவிதக் கருத்து வேறுபாடு உடையவர்களாலும், திருவள்ளுவர், ஏகமனதாகப்போற்றப்படுகின்ற காரணத்தால் **திருவள்ளுவர் ஆண்டு**, விரைவில் தமிழர் அனைவராலும் கையாளப்பட்டு, அரசியலாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு, தமிழர்களின் அதிகார பூர்வமான ஆண்டுமுறையாக ஆகும் என்பது உறுதி. இத்துறையில் பாரேனும் ஈடுபட்டு உழைத்தால் விரைவில் திருவள்ளுவர் ஆண்டு தமிழர்தம் வீடுதோறும் பவனிவரும் இன்பநிலை வந்து எய்தும் என்பதோடு, எவ்விதத்திலும் பயனற்ற -அருவருக்கத்தக்க புராணக் கதையின் அடிப்படையில் எழுந்துள்ள —தமிழர்தம் பண்பாட்டிற்கு முற்றிலும் புறம்பான -வடக்கிருந்து வந்த ஆரியர்தம் பழமைப்பித்துக்கு மட்டுமே திருப்தி தரக்கூடிய— ஆபாசமான 60 ஆண்டுக்கணக்கு முறையும் அழிந்து ஒழியும். தகுதியும் திறமையும் உடையார் சிலர் இத்துறையில் இறங்கிப் பணியாற்றவேண்டியது அவசியம். புதிய தமிழகம் தோன்றுவதற்கு முன் செய்யப்படவேண்டிய ஆக்க வேலைகள் பலவற்றில் இது முக்கியமான தொன்று.

3. காஷ்மீர் பிரச்சினையைப்பற்றி திராவிடர் கழகம் கொண்டுள்ள கருத்து யாது?

காஷ்மீரைப்பற்றி மட்டுமே அல்ல, பொதுவாகவே, சமஸ்தானங்களைப்பற்றி திராவிடர் கழகம் கொண்டுள்ள கருத்து, அந்த சமஸ்தானத்து மக்களின் விருப்பப்படி அந்த சமஸ்தானத்தின் ஆட்சிமுறையும், இந்திய யூனியனுடன் இணைவதா இல்லையா என்ற பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டும் என்பதுதான். காஷ்மீர் பிரச்சினையைப் பற்றி இப்போது இந்திய சர்க்காரும் பாகிஸ்தான் சர்க்காரும் ஒருமனதாக ஒப்புக் கொண்டுள்ள முடிவு, காஷ்மீர் மக்கள் இந்திய யூனியனுடன் சேர விரும்புகிறார்களா அல்லது பாகிஸ்தானுடன் சேர விரும்புகிறார்களா என்பதை காஷ்மீர் மக்களிடையே ஒரு தேர்தலை நடத்திப் பார்த்து, அந்த முடிவுப்படி அனைவரும் நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான். இந்த முடிவைத்தான், கழகம், காஷ்மீர் பிரச்சினை அரசியல் வானில் வட்டமிடத் தொடங்கிய முதல் நாளிலிருந்து கூறிவருகிறது. இந்த முடிவுக்கு இந்திய—பாகிஸ்தான் சர்க்கார்கள் முதலிலேயே ஒப்புக் கொண்டிருந்தால், இந்த இரண்டாண்டுகளாக காஷ்மீர் மண்ணில் கொட்டப்பட்ட குருதி, வீணாக்கப்பட்ட பணம், செலவிடப்பட்ட இராணுவத் திறமை, பாழாக்கப்பட்ட உழைப்பு —எண்ணம்—சிந்தனை இவ்வளவையும் தடுத்திருக்கலாம் என்பதோடு, காஷ்மீர் போரில் செலவான கோடானுகோடி பணத்தை மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்காகவும் இரு நாடுகளின் தொழில்வளம் சிறப்படைவதற்காகவும் பயன்படுத்தி இருக்கலாம். ஆனால் இந்திய—பாகிஸ்தான் சர்க்கார்களின் வீண் ஜம்பமும், வறட்டுப் பிடிவாதமும், "நீ ஒஸ்தியா—நான் ஒஸ்தியா" சண்டையும் இந்த நன்முடிவை விரைவில் உருவாகாவண்ணம் தடுத்து வந்தன. என்றாலும் இப்போதாவது இரு நாட்டு சர்க்கார்களும் பொது ஜன வாக்கெடுப்புதான் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சரியான மார்க்கம் என்னும் திராவிடர் கழக முடிவிற்கே வந்திருப்பதைக் காண, கழகம், உண்மையில் மகிழ்ச்சி அடைகிறது. இனி பிரச்சினை விரைவில் சிக்கலறத் தீர்ந்துவிடும் என நம்பலாம்.

4. திராவிடக் கட்சிக்காரர்களாகிய நீங்கள் இந்து மதத்தில் மாத்திரம் ஊழல் இருக்கிறது, மற்ற மதங்கள் எல்லாம் எவ்வளவோ மேலானது என்கிறீர்கள். அப்படியானால் மற்ற மதங்களில் ஊழல்களே இல்லை என்பது உங்கள் கருத்தா?

(8-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

பார்ப்பனரல்லாத சமுதாயத்திற்கு உரிய 500 முதல் 1600 வரை எள்ள இடங்களை பார்ப்பனர்கள் அநியாயமாக அனுபவித்து வரும் இந்த அக்கிரமத்தை என்றைக்கோ தடுத்துவிட்டிருப்பார்கள்! ஆனால் சென்னை சர்க்காருக்குப் போதிய தைரியமும் வீரமும் இல்லை—எனவே பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு ஏற்பட்டுவரும் இவ்வளவு பெரிய நஷ்டத்தைப்போக்க தங்கள் சுண்டு விரலையும் அசைக்க அஞ்சுகிறார்கள்! அவர்கள் என் செய்வார்கள் பாபம், அவர்கள் மீதும் குற்றமில்லை, அவர்கள் ஏதாவது தப்பித் தவறி பார்ப்பன குலத்தவரின் ஏகபோக ஆதிக்கத்தை இரண்டு அங்குல அளவுக்குக் குறைக்க முன் வந்தால்கூட, உடனே "டில்லிமேலிடம்", கட்சிப்—கபர்தார்—வாபீஸ் வாங்கு அந்த வகுப்புவாத உத்திரவை என்று தாக்கீது பிறப்பித்து விடுகிறது!

எனவேதான் கல்வித்துறையில் இதுபோது பார்ப்பனர்களுக்கு இருந்து வரும் இந்த ரகபோக ஆதிக்கத்தைத் தடுக்காமல் இருக்கும் சென்னை ஆட்சியாளர்களின் போக்கு நமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. டில்லி தேவதைகளிடம் தங்கள் மனச்சாட்சியையும் ஆட்சிக் கயிற்றினை ஆட்டி வைக்கும் அதிகாரபலத்தையும் ஒப்படைத்துவிட்டிருக்கும் தென்னாட்டுக் காங்கிரஸ்காராகள் அமைத்துள்ள ஒரு சர்க்காரிடமிருந்து திராவிட சமுதாயத்திற்கு நியாயம் கிடைக்கும் என்று எதிர்பார்க்க நாம் என்ன பைத்தியக்காரர்களா என்ன?

ஆனால் உண்மையில் நமக்கு அளவற்ற ஆச்சரியத்தை உண்டு பண்ணுவதாக இருப்பது, தங்கள் சமூதாயத்திற்குக் கிடைக்க வேண்டிய பங்கை விட 9 மடங்கும் 7 மடங்கும் $8\frac{1}{2}$ மடங்குதி 12 மடங்கும் 17 மடங்கும் **அதிகப்படியாகப்** பங்கு, கிடைத்து வருகிறது என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டுள்ள பார்ப்பன ஏடுகள், ஏதோ, தங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமையை யாரோ தட்டிப் பறித்துக் கொண்டு போய் விட்டது போலவும், அப்படிப்பட்ட "அநீதி" யான ஒரு செலக்குச் சேன்னை சர்க்கார் உடந்தை யாக இருப்பது போலவும் பாவனைச் செய்து ஆர்ப்பாட்டம் புரிகின்றனவே, அதுதான்!

நமக்கு மட்டுமல்ல, நடு நிலை உள்ளம் படைத்த யாருக்குமே, தம் பங்கை விட 17 மடங்கு அதிகப்படியாக பிறர் பங்கை அபகரித்து அனுபவித்து வரும் ஆரிய புரியினர் கசய்து வரும் ஆர்ப்பாட்டம் ஆச்சரியத்தைத் தரத்தான் செய்யும்! தங்களுக்கு உரிய இடத்தைப் பார்ப்பன மாணவர் களுக்குப் பறிகொடுத்து விட்டு, கல்லூரியில் சேரத் தங்கட்கு இடமின்றித் தெருவில் நின்று தவிக்கிறார்களே பார்ப்பன ரல்லாத மாணவர்கள், அவர் களுக்கு, ஆரிய ஏடுகளின் இந்த ஆணவப் போக்கு, ஆச்சரியத்தை மட்டும் அல்ல அதை விட அதிகமான அளவுக்கு வேதனையையும் தரும். ஆரிய புரியினரின் இந்த ஜூன் மாத ஆர்ப்பாட்டம் அதிகமாக ஆக திராவிட மாணவர் களின் வேதனையும் அதிகமாகும். அதனை அதிகம் ஆகும்படி விடுவது நாட்டு நலத்திற்கு நல்லதல்ல என்பதுமட்டுமல்ல, ஆரிய புரியினரின் நலத்திற்கே கூட நல்லதல்ல! உணரட்டும் இதனை ஆர்ப்பாட்டம் வேடம் பூண்டு எகிறிக் குதிக்கும் ஆரிய எத்தர்கள்!

நீங்கள் விரும்பும் புத்தகங்கள்!

	ரூ.	அ.
தமிழன் தொடுத்த போர்	1	12
சித்திரபுத்திரன்	0	6
புதியதோர் உலகு	0	6
ஈரோட்டுப் பாதை	0	6
திராவிடஸ்தான் வேண்டாமா	0	8
விதிக்கு அடிமைத்தனம்		2
கி. பி. 2000	1	12
உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு	0	8
காரல் மார்க்ஸ்	1	0
சிறந்த பேச்சாளர்	1	0
வீராயி	1	4
கொடு கல்தா	0	8
அம்பேத்கார் [வரலாறு]	1	0
இந்தி பொது மொழியா	0	8
சிரிக்கும் வையம்	0	4
நரகாசுரப் படுகொலை	0	12
வானொலியிலே	1	0
வாழ்க்கையில் வெற்றி	2	8
போர்வாள் நாடகம்	1	4
காமாந்தகாரக் கடவுள	0	8
இந்துமத ஆபாசதரிசனி	2	8
தாழ்வு மனப்பான்மை	0	12
நாஸ்திகர் யார்	0	6
கவிஞர் விழா	0	6
இந்திய சோஷலிசம்	0	12
இந்துமதம் தமிழர்மதமா		8

கோகில ராணி	1	0
கம்பரும் வம்பரும்	0	4
திராவிடஸ்தான்	0	10
இராமாயணம் நடந்த கதையா	0	3
பெண்கள் புரட்சி	0	14
பெண்கள் போராட்டம்	0	6
சங்கிலிச்சாமி	0	8
பிள்ளையோ பிள்ளை	0	6
பெரிய இடத்துப் பெண்	0	8
வாழ்க திராவிடம்	0	4
காதல் கடிதங்கள்	0	3
நல்ல பெண்கள் எப்படி இருப்பார்கள்	0	3
மூத்த மிடுவது தவறு	0	3
காதலை வளர்ப்பது எப்படி		3
பெண்களும் வசியமும்	0	4
பெண்களிடம் ஆண்கள் விரும்புவது என்ன	0	3
திராவிட இந்தியா	1	0
பெரியார் இராமசாமி	1	12
பழந்தமிழர்	2	0
பெரியார் பெருந்தொண்டு		8
மறுமலர்ச்சிக்கவிதைகள்		8
தமிழர் தன்மதிப்புப் பாடல்		6
பெரியார் பொன் மொழி		3
அறிஞர் அண்ணாதுரை	0	5
கடவுளால் ஆகாதது	0	8
பேசும் பிணம்	0	8

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு : : சென்னை 1

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அகம்பாவம் ததும்பி இருக்கிறது என்றும் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்.

இவ்வளவையும் எடுத்துக்காட்டி விட்டு, தோழர் அப்பாஸ், வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் இடையே உள்ள தடைச் சுவர்கள் இடித்துத் தூளாக்கப்படவேண்டும்—அந்த எண்ணத்தோடு அனைவரும் பணியாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார். வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்குமிடையே நல் உறவை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் ஆசைப்படுகிறார். அவருடைய ஆசையும் நோக்கமும் வேண்டுகோளும் தூய்மையானவை. ஆனால் பயன் அற்றவை. அவரே கூறி இருப்பதைப்போல, ஆரிய அகம்பாவமும், தாங்கள்தான் தென்னாட்டாரைவிட "ஒஸ்தி ஜாதி" என்ற அழுக்கு உள்ளமும் வட நாட்டவரிடையே நிறைந்துநிற்கிறது. தென்னாட்டு மக்களை, அவர்கள், மறுபடியும் அவருடைய வாசகப்படியே கூறுகிறோம், காட்டு மிராண்டிகளாகத்தான் கருதுகிறார்கள். இந்தியா விடுதலை பெற்ற பிறகும்கூட தென்னாட்டாரைப்பற்றி வட இந்தியர்களுக்குள்ள இந்த அருவருப்பும் அகம்பாவமும் சிறிதளவுகூட மாறக் காணோம். இனி எதிர்காலத்தில் மாற்றம் அடையும் என்று நாம் நம்புவதற்கு ஏற்றவண்ணமும் வட இந்தியர்கள் நடந்துகொள்ளவில்லை. இதற்கு நேர்மாறாக, நாளாக ஆக தென்னாட்டாரை அடக்கி ஆளவேண்டும் என்ற ஏகாதிபத்திய எண்ணமே வடநாட்டாரிடம் வளர்ந்து வருகிறது. தங்கள் இந்தி மொழியை எப்பாடு பட்டாவது தென்னிந்தியர் வாழ்விடையே திணித்து விடவேண்டும் என்று வட இந்தியர்கள் துடியாய்த் துடிக்கிறார்களே, இந்தத் துடிதுடிப்பு ஒன்றேபோதும் வட இந்தியர்களின் ஏகாதிபத்திய உணர்ச்சியை எடுத்துக்காட்ட! வட இந்தியர்கள் தங்களை, தென்னாட்டவரின் எஜமானர்களாகக் கருதி அந்த எண்ணத்தோடேயே நடந்துகொள்ளும் இந்த நிலைமை வளர வளர, தென்னாட்டவர்களுக்கும் வட இந்தியர்களிடம் உள்ள தொடர்பை கத்தரித்துக்கொண்டு, தனி அரசு அமைத்து, தனி வாழ்வு செலுத்தவேண்டும் என்ற ஆர்வம் வளர்ந்துகொண்டே வருகிறது. நிலைமை இப்படி இருக்கும்போது, அன்பர் அப்பாஸ், வட இந்தியர்களும் தென்னிந்தியர்களும் ஒன்றுபட்ட உள்ளத்தவர்களாக வாழவேண்டும் என்று "தர்மோபதேசம்" புரிந்து என்ன பலன்? எழுத்தாளர் அப்பாஸ் கொண்டுள்ள ஆசை என்னமோ நல்ல ஆசைதான்! ஆனால் அந்த ஆசை நிறைவேற வேண்டுமானால் அப்பாஸ் அவர்களே அழகுறப் படம் பிடித்துக் காட்டியுள்ள **ஆரிய அகம்பாவம்** அல்லவா வட இந்தியர் உள்ளத்தைவிட்டு விலகிச் செல்லவேண்டும். அது என்ன நடக்கிற காரியமா? கிழக்கே உதயமாகும் ஞாயிறு மேற்கே உதயமானாலும் ஆகும்; மேற்கே மறைகிற ஞாயிறு கிழக்கே மறைந்தாலும் மறையும்; தன்னைத்தானே ஓயாமல் சுற்றிக்கொண்டிருக்கும் பூமி சுழலாமல் நின்றுதும் வடக் நின்றுவிடும்; எப்பேகும் காந்த கேயே திரும்பி நிற்கும் காந்த ஊசி தெற்கே திரும்நிற்கும் நிலை நேரிட்டாலும் நேரும். ஆனால் வட இந்தியர் உள்ளத்தைவிட்டு ஏகாதிபத்திய உணர்ச்சி அகல்வது என்பது மட்டும் ஒரு போதும் நடைமுறைக்கு வராது என்பதை அன்பர் அப்பாஸ் நிசயமாக நம்பலாம்.

* * *

எல்லாம் சரி "போர்வாள்" ஆசிரியரே, தோழர் அப்பாஸ் வட இந்தியர்களைப்பற்றி இவ்வளவு அழகாகச் சித்தரித்துள்ள இந்த அரிய கட்டுரை எந்த இதழில் வெளிவந்திருக்கிறது என்பதை மட்டும் கூறாமல் விட்டுவிட்டீரே இது நியாயமா என்று யாரோ கேட்பது நம் காதில் விழத்தான் செய்கிறது. மன்னிக்கவேண்டும் நண்பர்கள், முதலிலேயே குறிப்பிட்டிருக்க வேண்டிய இந்த உண்மையை இதுவரை குறிப்பிடாதது நம் தவறுதான்! அப்பாஸ் அவர்களின் இந்த அரிய கருத்துரைகளைத் தாங்கி வெளிவந்திருக்கும் ஏடு—அதன் பெயரைச் சொன்னால் கூட நீங்கள் நம்பமாட்டீர்கள்—அல்லும் பகலும் திராவிடர் கழகத்தின்மீது ஆரிய ஆவேசத்துடன் அனல்கட்டிகளை அள்ளி வீசுவதில் முதல் பரிசு பெற்றிருக்கும் ஓர் மணியான பத்திரிகை! பார்ப்பனீய வெறியே உருவாக இருக்கும் ஓர் ஆங்கில எழுத்தாளரால் நடத்தப்படும் இதழ்! திராவிடர் கழகத்தை உடனே நசுக்கிவிடுவதுதான் சர்க்காரின் கடமை என்று சர்க்காருக்கு கீதோபதேசம் புரிவதையே தன் பிறவிக் கடமையாகக் கொண்டிருக்கும் ஒரு தெலுங்குப் பார்ப்பனரின் சொந்தப் பத்திரிகை! பெயர் என்ன தெரியுமா—ஸ்வதந்த்ரா—நம் வாயிலேயே நுழையாத வடசொல் பெயர்! அந்த ஏட்டின் 15.5-49 இதழில் 35, 36, 37-ம் பக்கங்களில் இருக்கிறது தோழர் அப்பாஸ் அவர்களின் கட்டுரை! இந்த உண்மையைக் குறிப்பிட்டதும் ஏன் இப்படி ஒரேயடியாக ஆச்சரியப்படுகிறீர்கள்? சுவதந்த்ராவில் கூட உண்மை உலவுகிறதே என்பதைக் கண்டா? ஆமாம் தானே!

புரோகிதர் ஆட்சி ★ **பாசறையின் புது வெளியீடு**

பன்னெடுங்காலமாக புரோகிதர்களின் கொடுமை எப்படி மக்கள் முன்னேற்றத்தைத் தடுத்துவந்திருக்கிறது என்பதை வரலாற்றுரீதியாக விளக்கும் அரிய புத்தகம்.

விலை அணா 8. தபாலில் அணா 9.

வணிகர்க்குத் தக்க கழிவு உண்டு.

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு :: சென்னை 1.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திராவிடக் கட்சிக்காரர்களாகிய நாங்கள் இந்து மதத்தில் மாத்திரம் தான் ஊழல்கள் உள்ளன, மற்ற மதங்களில் எல்லாம் ஊழல்களே கிடையாது என்று எப்போதும் கூறியதில்லை. நாங்கள் கூறி வருவதெல்லாம் மற்ற மதங்களில் இருப்பதைவிட இந்து மதத்தில் ஊழல்கள் அதிகமாக இருக்கின்றன என்பதுதான். இதற்குப் பொருள் மற்ற மதங்களில ஊழல்களே கிடையாது என்பதா? நண்பரே, நீரே சற்று எண்ணிப் பாரும்.

5. இன்றைய காங்கிரஸ் கட்சியில் எவ்வளவுதான் குறைகள் இருந்தபோதிலும் இந்தக் காங்கிரஸ் கட்சியைக் கட்டி வளர்த்தவர்கள் திருப்பூர் குமரனைப் போன்ற எண்ணற்ற தியாகிகள் என்பதை காங்கிரஸ்காரர்கள் பெருமையுடன் எடுத்துக் காட்டுகின்றனர். உங்கள் கட்சி அதுபோல தியாகிகளைப் பெற்றிருக்கிறது என்று கூறமுடியுமா?

நல்ல கேள்வி கேட்டீர் நண்பரே, மிக நல்ல கேள்வி கேட்டீர்! இதைவிட, தென்றலிலே இன்பம் தவழ்கிறது என்று எப்படி நீர் கூறமுடியும் என்று கேட்டிருக்கலாம். அல்லது தேனிலே சுவை ததும்புகிறது என்பதை எப்படி நான் ஒப்புக் கொள்ளமுடியும் என்று எழுதி இருக்கலாம். அல்லது கட்டிளங் காளையின் கரத்திலே பலம் இருக்கும் என்பதை யார் ஒப்புக்கொள்ள முடியும் என்று தீட்டியிருக்கலாம். திராவிடர் இயக்கத்திலே தியாகிகள் உண்டா என்று நீர் கேட்டதைவிட இவை போன்ற கேள்விகளில் ஒன்றைக் கேட்டிருந்தால் அது சாலப் பொருத்தமாக இருந்திருக்கும்.

எங்கள் இயக்கத்திலே தியாகிகள் உளவியாதுண்டா என்று நீர் கேட்கிறீரே கேள்வி, பத்தாண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது ஆயிரத்துக்கு மேற்பட்ட அருந்தமிழர்கள் வெஞ்சிறை புகுந்து வாடினரே செந்தமிழைக் காப்பதற்காக—அவர்கள் உம் கண்களுக்குத் தியாகிகளாகத் தென்படவில்லையா?

அவர்களிற் பலர் அழுக்குக் கஞ்சி குடித்தும் அரக்குக் காய்ச்சியும் கல் உடைத்தும் கடினவேலை பல செய்தும், எலும்பு ஒடியப் பாடுபட்டும், உடம்பு முறிய வேலை செய்தும் வெந்து கருகினரே சிறைச்சாலையில் — அவர்கள் உம் கண்களுக்குத் தியாகிகளாகத் தென்படவில்லையா?

அந்த ஆயிரம் ஆடவரும் சிறையில் கிடந்து புழுவெனத் துடித்தாலும் வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர் என்று பண்பாடிய வண்ணம் அஞ்சாத நெஞ்சுடைய ஆடவல்லறுகள் என உலவிடும் காட்சி கண்டு, இருநூறுக்கு மேற்பட்ட மாதரசிகள், ஒப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி ஈத்தனை பட்டாளம் கூட்டினாலும் என்ற வீரமுழக்கத்தை எழுப்பியவண்ணம் கடுஞ்சிறை புகுந்து, இரும்புக் கம்பிக்குள் உள்ளே கிடந்து, தமிழ்த் தவம் புரிந்தனரே— அந்த வீராங்கனைகளில் யாரும் உம் கண்களுக்குத் தியாகிகளாகத் தென்படவில்லையா?

மரணப்படுக்கையில் மாவீரர்கள் கிடந்தபோதும், மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் போதும்—முழு விடுதலை உடனே வரும் என்று மரமண்டைகள் ஆசை வார்த்தைகளை ஊட்டியபோதும், இந்தியை எதிர்த்தது தப்பு என்று கூறிவிடுங்கள்—ஏராளமாகப் பொன்னும் பொருளும் தருகிறோம் என்று ஆளவந்தார்களின் அடிவருடிகள் பணமூட்டையைக் காட்டிப் பல் இளித்து நின்றபோதும், மரணத்தின் அன்பழைப்பை ஏற்றுக் கொண்டு செத்தாலும் சாவோமே தவிர, எங்கள் இனிய தமிழைக் காட்டிக்கொடோம் கொடோம் என முழக்கமிட்டு இந்திக்குப் பலியானார்களே இளந்தமிழ்ச் சிங்கங்கள் தாளமுத்தும் நடராசனும்— அவர்கள், அந்த மாவீரர்கள், இணையில்லாப் புகழ் படைத்த அந்த இரு காளைகள், அவர்கள் கூட உம் கண்களுக்குத் தியாகிகளாகத் தென்படவில்லையா?

இம்முறை தொடங்கப்பட்டுள்ள அறப்போரில் ஈராயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் சிறையில் செத்த வாழ்வு வாழும் நிலையை சிரித்த முகத்துடன் ஏற்றுக்கொண்டு அந்த அடக்குமுறைக் கொட்டில்களின் உள்ளே புகுந்து, இறந்தார் போல் இருந்து, நோயுற்று நொடியுற்று, உடல் உரம் இழந்து, வலிவிழந்து வெளி வந்த[illegible] அவர்களில் ஒருவர்கூட உ[illegible] களுக்குத் தியாகியாகத் [illegible] வில்லையா?

போலீஸ்காரர்களின் [illegible] தடியடி உடலைத் துவட்டித் [illegible] எடுத்தபோதும், குருதி ஆ[illegible] பெருக்கெடுத் தோடிய[illegible] எலும்புகள் முறிந்து கீ[illegible] முறிந்து விழுகின்ற [illegible] டின்மீது மேலும் [illegible] உடல் சோர்ந்து தள்ளா[illegible] றுக் கீழே தரைமண்[illegible] சாய்த்து வீழ்ந்தபோது[illegible] ளவு கொடுமைகளைச் [illegible] போலீசை ஒழிக என[illegible] கூறாமல், அவர்களும் ந[illegible] தானே—அவர்கள் என்[illegible] பாபம்—ஆளவந்தார்கள[illegible] டளையைத்தானே நிறை[illegible] றனர்—சர்க்காரின் உ[illegible] அவர்கள்-எனவே தம் [illegible] நிறைவேற்றுகின்றனர் [illegible] எண்ணி பரிபூரண அஹி[illegible] களாகத் திகழ்ந்தனரே அ[illegible] பற்ற குடந்தை வீரர்கள்—அவர்கள் கூடவா உம் கண்களுக்குத் தியாகிகளாகத் தென்படவில்லை?

சீர்திருத்த இலட்சியங்களைச் செந்தமிழருக்கு வழங்கிய ஒரு "குற்றம்" தவிர வேறு குற்றம் ஏதும் செய்தறியாத அஞ்சா நெஞ்சன் வேலாயுதம், அந்த ஒரே குற்றத்திற்காக தன் உயிரையே வழங்கினானே பழமைப் பலிபீடத்தில்—அந்த வீரத் தமிழனுமா உம் கண்களுக்குத் தியாகியாகத் தோற்றமளிக்கவில்லை?

தியாகிகளா இல்லை திராவிடர் இயக்கத்தில்! அண்ணனின் அன்பு—தம்பியின் பாசம்—தாயின் பரிவு—தந்தையின் கருணை—உற்றாரின் நேசம்—ஊராரின் பாசம் இவ்வளவையும் இழந்து விட்டல்லவா நாங்கள் எங்கள் புரட்சிக் கொள்கைகளை எடுத்தியம்பி வருகிறோம்? புரட்சிப் பணியில் ஈடுபட்டுள்ளதின் காரணமாக அல்லவா நாங்கள் இவ்வளவு பாசத்தையும் நேசத்தையும் இழந்து விட்டிருக்கிறோம்? சொந்தக் குடும்பத்திலேயே வெறுப்பையும் சொந்த ஊரிலேயே பகையையும் தேடிக் கொண்டல்லவா நாங்கள் மூடநம்பிக்கை ஒழிப்புப் பணி புரிந்து வருகிறோம்! ஏண்டா கெட்டுக் கிரைவழி ஆகிறாய் என்று தாய் திட்ட, முன்னோர் ஆசாரத்தையா தாக்குகிறாய்—மு[illegible]

(12-ம் பக்கம் பார்க்க)

அறியாமை மட்டுமல்ல! அருவருப்பும்கூட!

"வட இந்தியர்கள் உள்ளத்தில் ...ன் இந்தியர்களைப்பற்றி எவ்வ ...வு அதிகமாக அறியாமை குடி ...காண்டிருக்க முடியுமோ அவ்வ ...வு அதிகமாகக் குடிகொண்டிருக் ...றது."

"பொதுவாக, சராசரி வட இந்தி ...ர்கள் உள்ளத்தில், தென் இந்தி ...ர்களின் வாழ்க்கை, பண்பாடு, ...லக்கியம், கலை ஆகியவற்றைப் ...றி ஒரு துளி அறிமுகம்கூட இல் ...மல் இருப்பதைக் காணும் எவ ...திடுக்கிடாமலிருக்க முடியாது."

"தென் இந்தியர்களைப்பற்றி வட ...தியர்களுக்குள்ள அறியாமை ...தன்மைத்து என்பதை, தென் ...ந்தியர்கள் அத்தனைபேரும் ...ரசி என்னும் ஒரு மொழியைத் ...ன் பேசிக்கொண்டிருக்கிறார்கள் ...ன்பதாக நம்பிக்கொண்டிருக்கி ...களே வட இந்தியர்கள், அதிலி ...தே நாம் தெளிவாகத் தெரிந்து ...ாள்ளலாம்."

"தென்னிந்தியாவில் தமிழ், ...லுங்கு, மலையாளம், கன்னடம், ...னும் நான்கு உயர்ந்த மொழி ...உள்ளனஎன்பதைப்பற்றியோ ...தமொழிகளில்சிறந்தஇலக்கியங் ...பல இருக்கின்றன என்பதைப் ...றியோ வட இந்தியர்களில் ...நம்பாலோருக்கு எள்ளின்முனை ...வுகூடத் தெரியாது."

"சாதாரண மாணவர்கள் மட் ...அல்ல, அறிவிற் சிறந்து புகழு ...விளங்கும் பல்கலைக் கழக ...வர்கள்கூட தென் இந்தியா ...பொறுத்தவரை இதே அறி ...ம நிலையில்தான் உள்ளனர்."

"...ஆங்கிலம், அமெரிக்க ஆங்கிலம், ...சு, சீன ஆகிய மொழிகளில் ...இலக்கியங்களைப்பற்றி உயர் ...ன சொரணையில் உரையாடக் ...வடஇந்தியக்கல்லூரி மாண ...ர்கூட தமிழிலோ அல்லது ...ாளத்திலோ புகழுடன் விளங் ...ரே ஒரு எழுத்தாளரின் அல் ...கவிஞரின் பெயரை மட்டும் ...சொன்னால்கூட கூறத் தெரி ...விழிப்பர்."

"...நாட்டு சங்கீதத்தைப்பற்றி ...நடனத்தைப்பற்றியும் அவர் ...நல்ல அறிவிருக்கக்கூடும்; புத்தகங்கள் வாயிலாகவும், சினிமாப்படங்கள் மூலமாகவும் இவற்றைப்பற்றி நன்கு தெரிந்து கொண்டிருப்பார்கள். ஆனால் தென்னாட்டுக் கதகளி நடனத்தைப்பற்றியோ பரத நாட்டியத்தைப்பற்றியோ என்றால், அப்படி யென்றால் என்ன என்பதுகூட அவர்களுக்குத் தெரியாது."

"சென்னையையும்தஞ்சாவூரையும் விட லண்டனும், பாரிசும், நியூயார்க் நகரமுமே தங்களுடைய டில்லிப் பட்டணத்துக்கும் லட்சுமணபுரி நகரத்திற்கும் அருகே இருக்கின்றன என்பது அவர்கள் நினைப்பு."

மேலே பொறிக்கப்பட்டுள்ள வாசகங்களைக் கண்ணுற்றதும், செ! செ! இந்தக் கருப்புச் சட்டைகளுக்கு வேறு வேலையே இல்லை போலிருக்கிறது! எப்போது பார்த்தாலும் வடஇந்தியர், வட இந்தியர், வடஇந்தியர் என்று தூற்றிக் கொண்டே இருக்கிறார்கள்; அவர்களைத் தூஷிக்காவிட்டால் இவர்களுக்குத் தூக்கமே பிடிக்காதுபோல் இருக்கிறதே, என்று "போர்வாள்" வாசகர்களில் சிலராவது கூறக்கூடும். சிலர், வட இந்தியர்களைப் பற்றி வீண் அவதூறு கூறுவதைத் தவிர வேறு என்னப்பா தெரியும் இதுகளுக்கு என்று எல்லாம்தெரிந்தவர்போல் ஏசவும் கூடும்! திட்டினால் பார்ப்பனர்களைத் திட்டுவார்கள், இல்லாவிட்டால் வட இந்தியர்களைத் தாக்குவாகள்! அது தவறினால் இது! இது தவறினால் அது! இந்த இரண்டும் தவறினால்இவர்கள் எழுதக்கூடியது வேறு எது என்றும் ஒரு சிலர் வெகு சாமர்த்தியமாகப் பேசுவதாக எண்ணிக் கொண்டு வெறும் வெற்றுவேட்டைக் கிளப்பக்கூடும். பெரியார் பொன்மொழிகள் என்ற தொகுப்பு நூலிலிருந்தே அறிஞர் அண்ணாதுரையின் திராவிடநாடு பத்திரிகையின் பழைய ஏடுகளிலிருந்தோ வெட்டி எடுத்து மக்கள்மன்றத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ள வாசகங்களே இவை என்று திராவிடர் கழகத் தோழர்கள் சிலர் கருதக்கூடும். ஆனால் அவர்கள் அனைவருக்குமே மிக வணக்கமான முறையில் அன்புடன் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறோம், கட்டுரைத் துவக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள் திராவிடர் இயக்கத் தலைவர்களோ, தோழர்களோ, பேசியனவோ எழுதியனவோ அல்ல. இந்த வாசகங்களைத் தீட்டியவர் திராவிட கழகத்தவர் அல்லர் என்பது மட்டுமல்ல இங்கே கவனிக்கப்பட வேண்டியது; அவர் ஒரு தென் இந்தியர் கூட அல்ல; வட இந்தியர்! கே. ஏ. அப்பாஸ் என்ற பெயர்படைத்தவர்! இன்றைய தினம் இந்தியாவிலுள்ள சிறந்த ஆங்கில எழுத்தாளர்களில் ஒருவர், அப்பாஸ்! இந்தியாவில் வெளிவரும் ஆங்கில ஏடுகள் பலவற்றிலும் அவருடைய எழுத்தோவியங்கள் அடிக்கடி வெளிவருவது வழக்கம். ஆங்கிலப் பத்திரிகைகளைப் படிக்கும் எவரும் தோழர் அப்பாஸ் அவர்களைப்பற்றி அறியாமல் இருக்கமுடியாது. அன்றன்றுட பிரச்சினைகளை அழகானமுறையில் அலசிக் காட்டுவதில் நிபுணர் தோழர் அப்பாஸ். அவர் காங்கிரஸ் கட்சியினிடமோ, காங்கிரஸ் தலைவர்களிடமோ வெறுப்புக் கொண்டவருமல்ல —காங்கிரசிடம் நல்ல பற்றுடையவர்- தென் இந்தியா தனிநாடாகப் பிரியவேண்டும் என்ற ஆசை காரணமாக தோழர் அப்பாஸ் இதுபோலவெல்லாம் வட இந்தியர்களைப்பற்றி இழிவாக எழுதுகிறார் என்று கூறுவதற்குமில்லை —அவரே ஒரு வட இந்தியர்! வட இந்தியர் என்பது மட்டுமல்ல, இந்தியா ஒரே நாடாக இருக்கவேண்டும் என்ற தத்துவத்தில் மிக அழுத்தமான பற்றுடையவர். அத்தகையவர்தான் இத்தகு வாசகங்களைத் தீட்டி இருக்கிறார்—எனவே இந்த வாசகங்களின் உள்ளுறைமுழுவதும் உண்மையே என்பதில் எவருக்கும் ஐயம் ஏற்பட முடியாது. ஒரு திராவிடக் கழகத்துத் தோழர் இதுபோலப் பேசினால், அவர் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர் எனவே வட இந்தியாவை விட்டு தென்னிந்தியா பிரிந்துநின்று தனி ஆட்சி செலுத்தவேண்டும் என்ற கருத்துடையவர் — ஆகவே தென்னிந்தியர்களைப்பற்றி வட இ[illegible]

களுக்கு இவ்வளவு அறியாமை இருக்கிறது என்பது நிலைநாட்டப் பட்டால்; அது அவருடைய திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கைக்கு மிக்க பலம் தரும்-ஆதலாலேதான் அவர் இதுபோல இட்டுக் கட்டிக்கூறுகிறார் என்று எளிதாகக் கூறித் தப்பித்துக் கொள்ளலாம். அல்லது ஒரு தென்னாட்டுக் காங்கிரஸ்காரர் இவ்வண்ணம் பேசி இருந்தால்கூட, "காங்கிரஸ் மேலிடம் வட இந்தியாவில் இருக்கிறது—அந்த "மேலிடம்" குட்டக் குட்டக் குனிந்து கொடுக்க வேண்டிய அவமானகரமான நிலையில் தென்னாட்டு காங்கிரஸ்காரர்கள் இருக்கின்றனர்—அந்த அவமானம் இயற்கையாகவே அவர்களுக்கு வட இந்தியர் மீது மன எரிச்சலை உண்டு பண்ணத்தான் செய்யும் -அந்த எரிச்சல் காரணமாகத்தான் இப்படி வட இந்தியர்களைப்பற்றி தூற்றல் அந்தாதியைத் தொடுத்திருக்கிறார்" என்று கூறி விடலாம். ஆனால் இப்போதோ அப்படியெல்லாம் கூறி விடுவதற்குமில்லை; தோழர் அப்பாஸ் திராவிடக் கழகத்தவரும் அல்லர்; தென்னாட்டவரும் அல்லர்; வட இந்தியர்! எனவே முன் குறிப்பிட்டவற்றைப்போன்ற தகிடுதத்த வாசகங்களைக்கூறி, இவருடைய குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம்பானவை அல்லது வேறு ஏதோ காரணத்திற்காகப் புகலப் பட்டவை என்று எவருமே நிலைநாட்டிவிட முடியாது. ஒரு வட இந்தியர்-அதிலும் ஒரு எழுத்தாளர்-அதுவும் ஒரு சிறந்த எழுத்தாளர் ஏன் தன் நாட்டைப் பற்றித் தானே இழிவாக எழுதிக் கொள்ளப் போகிறார்! ஆகவே தோழர் அப்பாஸ் கூறும் இந்தக் குற்றச் சாட்டுகள் அவ்வளவும் எழுத்துக்கு எழுத்து உண்மை என்பது வெள்ளிடைமலை.

"நான் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அலிகார் நகரத்தில் ஒரு கல்லூரி மாணவனாக இருந்தபோது, தென்னாட்டு நடனமாகிய கதகளி என்பது ஒரு நடனமா அல்லது ஒரு நோயின் பெயரா என்பதே எனக்குத் தெரியாது என்பதை நான் கண்ணியமாக ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும், ஆனால் அப்போது எனக்குத் தென்னாட்டைப் பற்றி இவ்வளவு அறியாமை இருந்ததென்றால் வட இந்தியாவில் நான் ஏதோ ஒரு தனி ரகம்-எனக்கு மட்டும் தான் இவ்வளவு அறியாமை இருந்தது என்று யாரும் எண்ணிக் கொள்ளத் தேவையில்லை. பொதுவாக வட இந்தியர்கள் அனைவருமே இந்நிலையில்தான் இருக்கின்றனர்." என்று தோழர் அப்பாஸ் மிகத் தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறார்.

வட இந்தியர்கள் உள்ளத்தில் தென்னிந்தியர்களைப் பற்றி எவ்வளவு அதிகமாக அறியாமை குடிகொண்டிருக்க முடியுமோ அவ்வளவு அதிகமாகக்குடிகொண்டிருக்கிறது என்கிறார் அப்பாஸ். ஆனால் இங்குள்ள தேசபக்த சிங்கங்களோ வட இந்தியத் தலைவர்களை தங்களின் முதுகுமேல் ஏற்றி வைத்துக் கொண்டு போற்றித் திரு அகவல் வாசித்தவண்ணம் இருக்கின்றன!

வடஇந்தியர்கள் உள்ளத்தில் தென்னிந்தியர்களாகிய நம்முடைய வாழ்க்கை, பண்பாடு, இலக்கியம், கலை ஆகியவற்றைப்பற்றி ஒரு துளி அறிமுகம்கூடக் கிடையாது என்று திட்டவட்டமாகக் கூறுகிறார் தோழர் அப்பாஸ். ஆனால் நம்மைப்பற்றி இவ்வண்ணம் ஒரு துளி அக்கறையுமின்றி வாழும் வட இந்தியர்களுடன் தானே நமக்கு என்றென்றும் பிரிக்கமுடியாத பாசமும் நேசமும் ஒரே ஆட்சி என்ற பந்தமும் இருக்கவேண்டும் என்று நாக்கூசாமல் கூறுகிறார்கள் நம் நாட்டுக் காமராஜர்கள்!

நாம் பேசுகின்ற மொழிகள்கூட வட இந்தியர்களுக்குத் தெரியாதாம், நம் அருமைத் தமிழும் தெலுங்கும் மலையாளமும் கன்னடமும் உயர்ந்த இலக்கியங்களைத் தம்மகத்தே கொண்டவை என்பது கூட அவர்களுக்குத் தெரியாதாம், நாம் அனைவரும மதராசி என்னும் பெயருடைய ஏதோ ஒரு மொழியைப் பேசிக்கொண்டிருக்கிறோம் என்று எண்ணுகிறார்களாம் வட இந்தியர்கள், எழுதி இருக்கிறார் அப்பாஸ், நம்மைப்பற்றி அவ்வளவு அறியாமை நிரம்பி இருக்கிறது வட இந்தியர்கள் உள்ளத்தில்! நாம் பேசிவரும் நால்வகை மொழிகளைப் பெயரளவில்கூடத் தெரிந்துகொள்ளவில்லை வடநாட்டு வீராதிவீரர்கள், இப்படிப்பட்டவர்களின் ஹிந்தி மொழியை மட்டும் நாம் கட்டாய பாடமாகப் படித்துத் தீரவேண்டுமாம்! கூறுகிறார்களே கூச்சமின்றி சர்தார் வேதரத்தினங்கள் அவர்களுக்கெல்லாம் என்ன நம் நாட்டு மானம் பறிபோவதைப்பற்றி துளியளவும் கவலை கிடையாதா? வட இந்தியர்களுக்கு நம் மொழிகளின் பெயர்கள்கூடத் தெரியாது! நாமோ அவர்கள் மொழியையே நம் தேசிய மொழியாக ஏற்றுக் கொண்டு அதில் சிறந்த பாண்டித்தியமும் பெற்று அதை நம் சொந்த மொழியாகக் கருதிப் போற்றவும் வேண்டும்! எவ்வளவு அகம்பாவம் இருந்தால் வட இந்தியர்கள் கூறுவார்கள் இது போல! எவ்வளவு அறிவீனம் இருந்தால் தென்னாட்டுத் தேசபக்தர்கள் இதை அப்படியே ஒப்புக்கொண்டு 'ஆமாம் சாமி' போடுவார்கள்! ஒரு வட இந்தியராகிய அப்பாஸ் அவர்களே தென் இந்தியர்களைப்பற்றி வட இந்தியர்களுக்குள்ள அலட்சிய மனோபாவத்தைக் கண்டு நான் திடுக்கிட்டுவிட்டேன் என்று கூறுகிறார்! ஆனால் இந்த தென்னாட்டின் சொந்தப் பிள்ளைகளாகிய ஓமந்தூரார்—அவினாசி — பக்தவச்சலம்— கோபால் ரெட்டி — குமாரசாமி ராஜா—பிரகாசம் — சுப்பராயன் அண்டு கம்பெனியாரோ வட இந்தியராவது தென் இந்தியராவது எல்லாம் ஒன்றுதான் என்று கூறுகின்றனர். செ! என்ன வெட்கக் கேடு!

வட இந்தியப் பல்கலைக் கழக மாணவர்களுக்குக்கூட, அதுவும் உயர்தரப் புகழுடன் விளங்கும் மாணவர்களுக்குக்கூட; அதுவும் சீனநாட்டு இலக்கியத்தைப்பற்றியும், அமெரிக்க நாட்டுக் கவிதையைப்பற்றியும், ஆங்கில நாட்டு எழுத்தாளர்களைப் பற்றியும், பிரஞ்சு நாட்டு நாடகங்களைப்பற்றியும் புலமைத்திறம் ததும்பத் ததும்பப்பேசக்கூடிய ஆற்றல் படைத்த மாணவர்களுக்குக்கூட, தமிழ் அல்லது மலையாள மொழிப் புலவர் ஒருவர் பெயர்கூடச் சொல்லத் தெரியாது என்று அன்பர் அப்பாஸ் கூறுகிறார், அகில உலக இலக்கியங்களையும் கற்றுத் தெளிந்த மாணவர்கட்கே தென்னாட்டுப் புலவர் ஒருவர் பெயர் கூடத் தெரியாது—தெரிந்து கொள்ள வேண்டும் என்ற கவலையும் கிடையாது என்று சொன்னால் மற்ற சாதாரண மாணவர்கட்கு எங்கே அது தெரியப்போகிறது? கற்றறிந்த மாணவர்த் தோழர்கட்கே தென்னாட்டுப் புலவர் ஒருவர் பெயரும் தெரியாது என்

(2-ம் பக்கம் பார்க்க)

தொடர்கதை:

ஆறும் பகுதி

வண்ணத் தடாகம்

அடர்ந்தகாட்டின் நடுப்பகுதி! அங்கே ஒரு பாழடைந்த மண்டபம்! அதற்கருகே அல்லியும் தாமரையும் பூத்துப் புன்னகை செய்து கொண்டிருக்கும் வண்ணத் தடாகம்! குளத்தில் குமரிகளின் கூட்டம்! ஆநந்த பரவசத்தோடு அவர்கள் ஈடுபட்ட குதூகல ஆட்டம்!

கச்சையணிந்த இளம் கன்னியர் காலடித்து நீந்திக் கொண்டிருந்தனர்! மூழ்குவாள் ஒருவள்! உள்நுழைந்து அவளைத் துரத்திப் பிடிப்பாள் மற்ருெருவள்! வானத்தைப் பார்த்துக் கொண்டே வண்ண உடலின் வனப்பு வெளிச்சிதற மிதந்து செல்வாள் வேருெருவள்!

இப்படிப் பார்ப்போர் கண்ணையும் கருத்தையும் இழுத்து, நிலைகுலையச் செய்யும் விதத்தில் அந்நேரத்தில் அத் தடாகம் காட்சியளித்தது.

வேதியன் **வேதபாரகனும்** சேர வேந்தன் சேந்தனும் அந்தப் பாழடைந்த மண்டபத்தின் அருகே வந்ததும், குதிரையை விட்டுக் கீழே இறங்கினர்!

திடீரென ஓர் சிரிப்பொலி! மன்னன் விழித்தான்! அரசனின் மாற்றத்தை நுணுக்கமாக அறியும் வேலையில் ஆரியன் ஈடுபட்டான்!

"யாரது சிரிப்பது! பெண்கள் குரல் போல் அல்லவா கேட்கிறது!"

"ஆம் அரசே, பெண்கள்தான்!"

"அடர்ந்த காட்டின் மத்தியில் மங்கையரா?"

"மங்கையர்தான்! தக்க வயதென்னும் வளமான நஞ்சையில் காலடி எடுத்து வைத்துள்ள பரிசுத்த கன்னியர்! இங்கே—இதன் அருகேதான்—எங்கள் இனத்தவரின் ஆஸ்ரமங்கள் இருக்கின்றன! அந்த ஆஸ்ரமத்தைச் சேர்ந்த பெண்கள்தாம் இவர்கள்!........."

வேதபாரகன் இப்படிக் கூறிவிட்டு, மன்னனின் முகத்தை உற்றுப் பார்த்தான், சேரன் பாழடைந்த மண்டபத்தினுள் சென்றான். அங்கே இடிந்து கிடந்த ஒரு மேடையின் கீழ் ஏறிநின்று எழிலும் போதையும் நிறைந்த அக் குளக் காட்சியைக்கண்டான்! பகலவனின் ஒளியைவிட பாராள்வோனின் கண்களின் ஒளி அந்நேரத்தில் அதிகமாக விருந்தது!

வெற்றிமேல் வெற்றி இனி நிச்சயம்—தொலைத்து விட்டேன் அந்தப் பயல்களை—ஆரிய குல தர்மத்திற்கு இனி ஜெயமுண்டு பயமில்லை மனமே—இப்படி உள்ளத்தோடு உள்ளமாகப் பேசிக்கொண்டான் ஆரியன்!

"வெய்யிலில் வந்ததினல் வியர்வை கொட்டுகிறது—உடல் எரிகிறது! குளத்திற்குச் சென்று முகத்தையாகிலும் அலம்பிக் கொண்டு வரலாமே?"

"வேதபாரகரே, தடை ஏது? அப்படியே செய்யலாம்!"

தடைஏது? தங்க உடல்கொண்ட தையலர் கூட்டம் தாமரைக்குளத்தில் நிறைந்திருக்க—அக்காட்சியை அருகில் சென்று கண்டு களிக்க வேண்டுமென உள்ளம் துடிக்க—உடல் பதைக்க, தடையும் இருக்க முடியுமா? மலிவான காட்சியா என்ன மற்றவர்களுக்கு அது கிடைக்க? மன்னன், ஆகவே கிடைத்தது! கிடைத்ததா? அல்ல, ஏற்பாடு செய்யப்பட்டது!

அரசனும் ஆரியனும் குளக்கரைக்கு வந்து நின்று, மெதுவாக படிக்கட்டுகளில் கால்வைத்தனர் இறங்க!

காவலன் வருவதைக் கண்ட கருவிழிக் கன்னியர், நீரைவிட்டு விரைவாக வெளியே வந்து, கரையிலிருந்த சேலைகளை எடுத்து, கவர்ச்சியும் இளமையும் கட்டியணைத்துக்கொண்டிருந்த பொன் மேனிகளில் வேகவேகமாக அரைகுறையாகச் சுற்றிக்கொண்டு, மான்போல் துள்ளியோடி, மறைந்தனர்!

மறைந்தனர்! ஆனல் மன்னனின் மனத்திரையில் மங்கி மறையாது, வண்ண ஓவியமாகப் பதிந்து விட்டனர்!

"வனமோகினிகளா இவர்கள்? ரம்பை, ஊர்வசி, திலோத்தமை—இப்படி தேவலோகத்தில் ஆடலழகிகள் இருப்பதாக அடிக்கடி கூறுவீர்களே, அவர்கள்தானு இவர்கள்?" காட்சிதந்த மயக்கத்தில் இப்படி சேரன் கேட்டான்! ஆரியன் புன்னகை செய்தான்!

"ஆசிரமத்துப் பெண்கள் என்றேனே..........."

"ஆமாம், ஆமாம், இப்பொழுது தானே கூறினீர்கள்! நினைவிருக்கிறது! நான்........"

"ஏன் தயங்குகிறீர்கள்! இக் குளம் யாரைச் சேர்ந்தது?"

"சேரநாட்டைச் சேர்ந்தது!"

"சேரநாடு உமக்குச் சொந்தம்! இந்த வண்ணத் தடாகமும் உமக்குத்தான் சொந்தம்!" என்று கூறி வேதபாரகன் சிரித்தான்!

அந்தச் சிரிப்பு — தன் கவலை நிவாரண மருந்து என்று சேர வேந்தன் எண்ணினன்! அந்தச் சிரிப்பு — தன்னையும் செந்தமிழர் நாட்டையும் வளைத்துப் பிடித்து நாசமாக்கி அழிக்கப் போகும் வலை — பயங்கரக்கருவி — என்பதை அந்நேரத்தில் அவனறியான்!

ஆரியப்பெண்கள் — வண்ணத் தடாகம்! மன்னனின் மனம் குழம்பியது!

குளத்தில் முகம் கழுவிக் கொண்டு இருவரும் வெளியே வந்தனர்! வேதபாரகன் முன் செல்ல, சேந்தன் பின் நடந்தான்! ஆசிரமத்தை வந்தடைந்தனர்!

ஒரு குடிசையினுள் வேதியன் மட்டும் நுழைந்தான்!

"போங்கள் அப்பா! அரசரை அப்படியா திடீரென்று குளத்திற்கு

அழைத்துக்கொண்டு வந்து விடுவது?''

''அப்படிச் செய்ததினுல்தான் மதுவுண்ட மந்திபோல் மயக்கத்திலிருக்கிருன் மன்னன்! அதிருக்கட்டும் பிரேமா, நான் சொன்னதெல்லாம் அப்படியே கவனமிருக்கிறதா?''

''நினைவிருக்கிறது. அப்பா! நம் இனம் வாழ என் காதலைத்தானு பலியிடவேண்டும்?''

''காதலைப் பலியிடும்படியா சொன்னேன்? அடி பைத்தியமே அதனைத்தானே தாராளமாக மன்னனிடம் காட்டும்படி கூறினேன்''

''நான்......''

,,தெரியும் அந்த அசடுமீது நீ காதல் கொண்டிருப்பது! இது சேர நாட்டில் காலடி எடுத்து வைத்தாயே அந்தப் பாபமடி! காதலாம் காதல்—அது ஏண்டி நமக்கு! காரியமாக வேண்டும்—செல்வாக்கு மிக வேண்டும்—சேரநாடு நம் பரம்பரைச் சொத்தாகவேண்டும்—பூசுரர் என்று மக்கள் காணிக்கை தந்து நம் காலில் விழுந்து பூசிக்க வேண்டும்—நாம் வாழ வேண்டும், நம் இனம் வாழ வேண்டும்—இதுதான் நம் வாழ்க்கை இலட்சியம்! அசடு போல் ஏதேதோ பிதற்ருதே! மன்னன் வெளியிலிருக்கிருன்! தயாராக இரு! நான் அழைத்து வருகிறேன்''

வேதபாரகன் வெளியே சென்று வேந்தனை உள்ளே அழைத்துவந்து ஓர் ஆசனத்தில் அமரும்படிக் கூறினுன். ஒரு பக்கமாக பத்தரை மாற்றுப் பசும் பொன்னில் வார்த்தெடுத்த சிலைபோல பிரேமா நின்றுகொண்டிருந்தாள்!

''அரசே, இவள்தான் என் மகள் பிரேமா!'

''அப்படியா! மகிழ்ச்சி! ஏன் நகரில் வந்திருக்காமல் இங்கேயே இருக்கிருள்?''

'நான் அழைத்து அழைத்துப் பார்த்தேன், வரவேமாட்டேன் என்று மறுத்தே விட்டாள்!''

''ஏன்?''

''அவளையே நீங்கள் கேளுங்கள்!''

''ஏன் பிரேமா?''

பிரேமா பேசாது, தரையைப் பார்த்தபடி நின்றிருந்தாள்.

''நீங்களும் குழந்தையும் பேசிக்கொண்டிருங்கள் — அதற்குள் கடைசி ஆசிரமத்தில் ஒருவரைப் பார்த்து விட்டு வந்து விடுகிறேன்!''

குடிசையில், சேரனும் பிரேமாவும்! இருவரும் சிறிது நேரம் மௌனமாக விருந்தனர்! பசிகொண்ட யானை—எதிரில் கரும்புத் தோட்டம்!

உள்ளத்தில் கனல் கொழுந்து விட்டெரிந்தது! பிரேமாவின் குளிர் மலரப் பார்வை எதிரில் இருந்தது! கனல்—அது தணிய குளிர்நீர்! இரண்டும் ஒருங்கே! வண்ணத் தடாகம் மன்னனின் மனக் கண்முன் தோன்றலாயிற்று!

''பிரேமா?''

அழகி அருகில் வந்தாள்!

''பயப்படுகிருயா?''

குறும்பு நிறைந்த பார்வையை வீசினுள், பதிலளிக்கவில்லை!

நான் வந்திருப்பதும், இப்படிப் பேசுவதும் பிடிக்கவில்லையா?''

தேன் இதழ்கள் மெதுவாக மெல்லெனச் சிரித்தாள்!

''உன் கண்ணிற்கிருக்கும் கருணை கூட உன் நாவிற்கு இல்லையே!''

முல்லை அரும்புகள் போன்ற பற்கள் வெளித்தெரிய நகைத்தாள்!

''பிரேமா, நீ ஏன் நகரில் வந்திருக்கக்கூடாது!''

''எப்படி வந்திருக்கமுடியும்?''

''ஏன்?''

''எங்கள் இனத்தவர்களைத்தான் தமிழர்கள் வெறுக்கிருர்களே!''

''தமிழர்கள் வெறுக்கிருர்களா? வெற்றுப் பேச்சு! பிற இனத்தாரை ஏற்று உபசரிப்பதுதானே தமிழரின் பண்பு? கோயில்களில் வடமொழிப் பாடல்கள் அவசியம் என்ருர் உன் தந்தை! அதன்படியும் நான் நடந்திருக்கிறேன்!''

''அதனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தானே மருதன்......''

''ஆம் அவனை நாடு கடத்தி நல்ல தண்டனை கொடுத்தாயிற்றே!''

''தண்டனை தந்தீர், ஆனல் அவன் தங்கள் முடியைப் பறிக்க முயற்சி செய்கிருன்!''

''என்ன? என்ன?''

பிரேமா அவன் காதில் மெதுவாக ரகசியமாக ஏதேதோ கூறினுள்.

''அப்படியானுல்........''

''தாங்கள் அவனைக் கண்டுபிடித்துத் தூக்கிலிடவேண்டும்''

''சரி!''

இருவரும் குடிசையில் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தனர். குடிசையின் வெளியே ஒளிந்துகொண்டு அவர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த தாயமணியும் கிழவனும் அப்புறம் சென்றனர்.

''தம்பி, ஆரிய மாயையைப் பார்த்தாயா?''

''என் உள்ளம் கொதிக்கிறது! அங்கமெலாம் துடிக்கிறது! ஐயா மருதன் என்று பிரேமா கூறினுளே, அவன் யார்?''

''தம்பி, நான் தான்!''

''நீங்களா!''

ஆச்சரியத்தால் தாயமணியின் கண்கள் அகல விரிந்தன!

(தொடரும்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

திலே விழிக்காதே ஓடிப்போ என்று பெற்ற தந்தை ஏச, அவன் சூனுமானு—கடவுளையே மறுக்கும் கயவன் என்று காண்பவர் வசைமொழி வீச, கலப்பு மணம் செய்துகொள்வானும் கலப்பு மணம்—சொந்த ஜாதிக்கு ஊறு தேடும் உலுத்தன் என்று ஜாதிமக்கள் கூசாது கூற, இவ்வளவு தாக்குதலுக்கும் வசைமொழிக்கும் சளைக்காது நின்று, இவ்வளவு ஏசலையும் பழியையும் தாங்கிக் கொண்டு நாங்கள், ஓயாது சாயாது, அஞ்சாது அடங்காது, கால் இடறி வீழாது தலைசுற்றிக் கவிழாது பணியாற்றி வருகிறோமே—இதைவிட சிறந்த தியாகம் வேறு இருக்க முடியுமா? இது தியாகம் அல்ல என்ருல் வேறு எது தியாகம் என இயம்ப முடியுமா?

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hon